[1979 மார்ச் 3

கள்ளக்குறிச்சியில் பேருந்து பணிமனை

¼ வினா எண். 211— திரு. சின்னசேலம் மா, சுப்பிரமணியன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கள்ளக்குறிச்சியில் அரசு போக்குவரத்துப் பணிமனை ஒன்று ஏற்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பணிமனை ஒன்றைத் துவக்க இடம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நிலத்தைக் கையகப்படுத்திய பின்பு, கட்டுமான வேலை துவக்கப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தையும் வடாற்காடு மாவட்டத்தையும் இணைத்துப் பெரியார் போக்குவரத்துக் கழகம் இயங்கி வருகிறது. இரண்டு மாவட்டங்களுக்கும் மையமாக கள்ளக்குறிச்சி இருக்கிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பே நிலத்தைக் கையகப்படுத்த அரசு முன் வந்திருந்தும் இதுவரையில் அதற்கான எந்தவிதமான முயற்சியும் இல்லாமல் இருக்கிறது. உடனடியாக அந்த இடத்தைக் கையகப்படுத்தி பணிமனையை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-40]

* மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சியில் ரூ. 14,000 செலவில் நிலத்தை வாங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நிலம் வாங்கப்பட்டவுடன் பணிமனை கட்டப்படுகின்ற நிலை ஏற்படும்.

பூம்புகாரில் தொழிற்பேட்டை

வினா எண். 212—திரு. எஸ். கணேசன், திரு. என். கிட்டப்பா மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

பூம்புகாரில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் யோசனை உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பூம்புகார் பகுதியில் தொழிற் பேட்டை அமைக்கக்கோரி தொழில் முனைவோர்களிடமிருந்து போதிய அளவில் கோரிக்கைகள் வரப்பெற்றால், அங்கு தொழிற்பேட்டை அமைப்பது அல்லது சிறுதொழில் கூடங்கள் கட்டுவது பற்றி அரசு பரிசீலிக்கும்.